தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண் 78/பேரூ/2023
நாள் 13.05.2023

திரு. M.முகமது ஜியாவுதீன்,
முதுகுளத்தூர்,
இராமநாதபுரம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
முதுகுளத்தூர் பேரூராட்சி,
இராமநாதபுரம் மாவட்டம். – எதிர் மனுதாரர்

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர், முகமதியார் நடுத் தெரு, எண்.8–B என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. முகமது ஜியாவுதீன் என்பவரின் 23.03.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.03.2023 அன்று பெறப்பட்டு 78/பேரூ/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர், முகமதியார் நடுத் தெரு, எண்.8–B என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. முகமது ஜியாவுதீன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"முதுகுளத்தூர் பேரூராட்சி எல்லைக்குள் 15 வார்டுகள் உள்ளன. இந்த வார்டுகளில் இருந்து வெளியேறும் கழிவு நீர், வீடுகள், வணிக வளாகங்களின் அலுவலகத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர்களை முறையாக வெளியேற்றுவதற்கு முதுகுளத்தூர் பேரூராட்சி பகுதிகளில் முறையாக வரத்து கால்வாய் இல்லை. முதலமைச்சர் தனிப்பிரிவு, சிவகங்கை பேரூராட்சி மண்டலம், மாவட்ட ஆட்சியர், சார் ஆட்சியர், பேரூராட்சி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மனு அனுப்பி வருவாய் சட்டம் 540 பிரகாரம் வரத்து கால்வாயில் ஆக்கிரமிப்பு இருப்பினும் அளவீடு செய்து அகற்றி கழிவுநீர் செல்வதற்குவழிவகை செய்யுமாறு மனு அனுப்பியும் எந்த ஒரு நடவடிக்கையும் அளவீடும் செய்யப்படவில்லை. அளவீடு செய்யப்படாமல் எனக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. ஆகையால் அய்யா அவர்கள் இந்த மனுவை பெற்றுக் கொண்டு முதுகுளத்தூர் பேரூராட்சி பகுதியில் 15 வார்டுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரை

வெளியேற்றுவதற்கு முறையான வரத்துக் கால்வாய்களை சரி செய்வதற்கும், உத்தரகோசமங்கை செல்கின்ற ரோடு கடலாடி ரோடு, கமுதி ரோடு, பரமக்குடி, முதுகுளத்தூர் செல்கின்ற ரோடு அனைத்தும் கட்டடங்கள் கட்ட பேரூராட்சியால் அனுமதி வழங்கப்படுகின்றன இந்த கட்டடங்கள், வரத்து கால்வாய்களை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளன. இதை சரி செய்வதற்கு பலமுறை பேரூராட்சி, வட்டாட்சியர் அலுவலகங்களில் மனு கொடுத்தும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பேரூராட்சியால் வழங்கப்படுகின்ற கட்டட அனுமதியால் வரத்து கால்வாய்களை, பாசனத்திற்கு நீர் செல்லும் வாய்க்கால்களை மறைத்து கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன ஆகையால் ஐயா அவர்கள் விசாரணை செய்துவரத்து கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி கழிவுநீர் செல்வதற்கும் முறையான பாசனத்துக்கு நீர் செல்வதற்கும் வரத்து கால்வாய் ஆக்கிரமிப்பை அகற்றி வழிவகை செய்யுமாறு பணிவுடன் கேட்டு கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 06.04.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் முதுகுளத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

முதுகுளத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 19.04.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"முதுகுளத்தூர் பேரூராட்சியில் சுமார் 15 ஆயிரம் மக்கள் வசித்து வருகின்றனர். இப்பேரூராட்சியில் 15 வார்டுகளில் 104 தெருக்கள் உள்ளன. 5001 குடியிருப்புகளும், 1275 வணிக கட்டடங்களும் உள்ளன. இதில் 2300 குடியிருப்பு கட்டடங்களுக்கு குடிநீர் இணைப்புகள் உள்ளன. இக்குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் வணிக நிறுவனங்களிடமிருந்து நாள் ஒன்றுக்கு சுமார் 10 இலட்சம் லிட்டர் கழிவு நீர் வெளியேறுகின்றன. கழிவுநீர் செல்வதற்கு வடிகால் வசதியின்றி நகரின் அருகில் உள்ள விவசாய நிலங்களில் பாய்ந்து விவசாயங்கள் வீணாகின்றன. எனவே 15 வார்டுகளிலும் வெளியேறும் கழிவு நீரினை வாய்க்கால் அமைத்து கொண்டு செல்வதற்கு முத்திலிமடைவாய்க்கால் பகுதி முழுவதையும் நிலஅளவை செய்ய வேண்டி கடிதம் மூலம் வட்ட துணை ஆய்வாளர், வருவாய் ஆய்வாளர், கிராமநிர்வாக அலுவலர் மற்றும் குறுவட்ட அளவர்களை கேட்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 18.04.2023 அன்று முதல் நில அளவை செய்யும் பணி நடைபெற்றுவருகிறது.

மேலும் வாய்க்காலில் வெளியேறும் கழிவு நீரினை ஊருக்கு வெளிப்புறத்தில் கொண்டு சென்று கழிவுநீரினை சுத்திகரிப்பு செய்து அருகில் உள்ள விவசாய நிலங்களுக்கு வழங்கப்படுவதற்கு ரூ.500.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து தீர்மானத்தின் மூலம் பேரூராட்சி மன்றத்தில் அனுமதி பெறப்பட்டு, பேரூராட்சி தலைவர் அவர்களால் அரசிடம் நிதி கோரப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் காணொளி காட்சி ஆய்வுக்கூட்டத்தில் சுத்திகரிப்பு நிலையம் அமைத்திட இடம் தேர்வு செய்து உதவி இயக்குநர் அலுவலகம் மூலம் கருத்துரு தயார் செய்து அனுப்பிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட கால்வாய் மூலம் வெளியேறும் கழிவுநீரினை சுத்திகரிப்பு செய்திட சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு கீழமுதுகுளத்தூர் கிராம புல எண். 52/1 மற்றும் புல எண். 213/1 ஆகிய இரண்டு இடங்களை தேர்வு செய்து இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் அரசு புறம்போக்கு நிலம் ஒதுக்கீடு செய்ய வேண்டி முதுகுளத்தூர் பேரூராட்சி அலுவலக கடிதம் ந.க.எண்.அ1/114/2023 நாள் 20.03.2023 மூலம்

கோரியதில், மாவட்ட ஆட்சியர் அவர்களின் 31.03.2023 நாளிட்ட கடிதத்தில் வருவாய்த்துறை அலுவலர்களுடன் இணைந்து கூட்டு புல தணிக்கை செய்து விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் வட்டாட்சியரின் 13.04.2023 நாளிட்ட கடிதத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க புல தணிக்கை மேற்கொள்ள வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் குறுவட்ட நிலஅளவையர், மண்டல துணைவட்டாட்சியருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே மனுதாரர் தெரிவித்துள்ள முத்திலிமடை வாய்க்கால் பகுதி முழுவதும் நிலஅளவீடு செய்து முடிக்கப்பட்டவுடன் ஆக்கிரமிப்பு ஏதும் இருப்பின் அவை முழுமையாக அகற்றப்படும். மேலும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வட்டாட்சியர் அவர்களின் இசைவு தெரிவிக்கப்பட்டவுடன் அரசிடமிருந்து நிதி பெற்று சுத்திகரிப்பு நிலையம் மற்றும் புதிய கால்வாய் கட்டும் பணி நடத்தி முடிக்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான முதுகுளத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரும், 19.04.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.04.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.M.முகமது ஜியாவுதீன், என்பவர் 19.04.2023 அன்றைய நேரடி விசாரணைக்கு வரஇயலாத காரணத்தைத் தெரிவித்து மற்றொரு நாளில் விசாரணையை நடத்தக் கோரி, மேற்படி விசாரணைக்கு ஆஜராகவில்லை.

(5) எதிர்மனுதாரரான முதுகுளத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.மாலதி என்பவர் 19.04.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள 15 வார்டுகளில், 104 தெருக்கள் உள்ளன. அங்குள்ள குடியிருப்புகளிலிருந்தும், வணிக வளாகங்களிலிருந்தும் வெளியேறும் கழிவுநீர் வெளியேறுவதற்கு வழியில்லாமல் அங்குள்ள விவசாய நிலங்களில் சென்று விவசாயம் பாதிக்கப்படுகிறது. எனவே, கழிவு நீர் வாய்க்காலில் முறையாக செல்வதற்கு முத்திலிமடை வாய்க்கால் பகுதியை நில அளவை செய்துதர வருவாய்த் துறையினரை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கண்ட கால்வாய் மூலம் வெளியேறும் கழிவுநீரினை சுத்திகரிப்பு செய்திட சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு கீழ்முதுகுளத்தூர் கிராம புல எண்.52/1 மற்றும் புல எண்.213/1ல் அரசு புறம்போக்கு நிலங்கள் தெரிவு செய்யப்பட்டு, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கருத்துரு அனுப்பப்பட்டு, வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையர், மற்றும் மண்டல துணை வட்டாட்சியருக்கு மாவட்ட ஆட்சியரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வட்டாட்சியர் இசைவு பெற்றவுடன் அரசிடமிருந்து பெறப்படும் நிதியைக்கொண்டு சுத்திகரிப்பு நிலையம் மற்றும் புதிய கால்வாய் கட்டும் பணி நடைபெறும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் நில அளவை முடிந்தவுடன் மனுதாரர் தெரிவித்துள்ள முத்திலிமடை வாய்க்காலில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இருப்பின் அவை முழுமையாக அகற்றப்படும் எனவும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக எனது 19.4.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) மனுதாரர் திரு.M.முகமது ஜியாவுதீன், என்பவர் 19.04.2023 அன்று நடைபெற்ற விசாரணைக்கு பதிலாக மற்றொரு தேதியில் விசாரணையை நடத்த கோரியதை இம்முறைமன்ற நடுவம் ஏற்று, மேலும் ஒரு வாய்ப்பாக 02.05.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகுமாறு மனுதாரருக்கு 25.04.2023 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால் 02.05.2023 அன்றைய நேரடி விசாரணைக்கும் மனுதாரர் ஆஜராகவில்லை.

(7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, முதுகுளத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூரைச் சேர்ந்த மனுதாரர் தனது 23.03.2023 நாளிட்ட மனுவில் முதுகுளத்தூர் பேரூராட்சியின் 15 வார்டுகளில் அமைந்துள்ள வீடுகள், வணிக கட்டடங்களிலிருந்து வெளியேறும் கழிவுநீர் செல்வதற்கு முறையான வடிகால், கால்வாய் பேரூராட்சியில் அமைக்கப்படவில்லை எனவும், கட்டடங்கள் முறைகேடாக ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ளதால் கழிவுநீர் வெளியேறுவதற்கு வழிவகை இல்லை எனவும் புகாராக தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் பேரூராட்சியில் 104 தெருகள் கொண்ட 15 வார்டுகளில் அமைந்துள்ள 5001 குடியிருப்புகள் மற்றும் 1275 வணிகக் கட்டடங்களிலிருந்து தினந்தோறும் வெளியேறும் சுமார் 10 இலட்சம் லிட்டர் கழிவுநீர் செல்வதற்கு வடிகால் வசதியின்றி நகரின் அருகிலுள்ள விவசாய நிலங்களில் கலப்பதால், பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற புகாரினை தொடர்ந்து, அதற்கு தீர்வு காணும் வகையில் திரவகழிவுநீர் மேலாண்மை திட்டத்தின்கீழ் கழிவுநீரினை சுத்தகரிப்பு செய்யும் வகையில் ரூ 500/- இலட்சம் மதிப்பீட்டில் சுத்திகரிப்பு நிலையம் அமைத்திட மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அரசு புறம்போக்கு நிலத்தினை கோரலாம் என 30.06.2022 அன்று பேரூராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தீர்மான எண்.42, நாள் 30.06.2022 -ல் கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையம் அமைப்பது குறித்தான விரிவான திட்ட அறிக்கை ஒன்று பேரூராட்சியால் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, முதுகுளத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 20.03.2023 நாளிட்ட கடிதத்தில் முதுக்குளத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 52/1 கடலாடி ரோடு, கீழமுதுகுளத்தூர் மற்றும் புல எண்.213/1 உத்திரகோசமங்கை ரோடு, கீழமுதுகுளத்தூர் ஆகிய இடங்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு முன்நுழைவு அனுமதி பெற்றுத்தர வேண்டி இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரிடம் கோரப்பட்டுள்ளது.

இதன் தொடர் நடவடிக்கையாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் 31.03.2023 நாளிட்ட கடிதத்தில் முதுகுளத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர், வருவாய்த்துறை அலுவலர்களுடன் இணைந்து மேற்படி புலத்தினை கூட்டுப்புலத் தணிக்கை மேற்கொண்டு தகுதியான புலமாக இருப்பின் அதில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்குமாறு பேரூராட்சி செயல் அலுவலரை மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், முதுகுளத்தூர் வட்டாட்சியர் தனது 13.04.2023 நாளிட்ட குறிப்பாணையில் முதுகுளத்தூர் வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நிலஅளவர் ஆகியோர் மேற்படி புல எண்.52/1 மற்றும் 213/1 ஆகிய நிலங்களை புலத்தணிக்கை மேற்கொண்டு உரிய அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

பேரூராட்சிகளில் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்க கழிவுநீரை பாதுகாப்பாக அகற்றி தீர்வுசெய்வது அவசியமானதாகும். முதுகுளத்தூர் பேரூராட்சியின் குடியிருப்புகள் மற்றும் வணிகக் கட்டடங்களிலிருந்து வெளியேறும் கழிவுநீரை வெளியேற்ற போதிய வரத்து கால்வாய் இல்லாத புகார் பொது மக்களிடமிருந்தும், மனுதாரரிடமிருந்தும் வரப்பெற்றதும், அதற்கு தீர்வு காணும் வகையில் ரூ 500 இலட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு உண்டான நிதியினை அரசிடம் பெறுவதற்கு உரிய கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க பேரூராட்சிக்குட்பட்ட நிலத்தினை தெரிவு செய்து, அதற்கான கருத்துரு மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டு, அதன் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதும் ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது. மேலும், மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள முத்திலிமடை வாய்க்காலில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இருப்பின் அவற்றை முழுமையாக அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பேரூராட்சி செயல் அலுவலர் உறுதி அளித்துள்ளது அவரது வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

19.04.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் ஆஜராகாமல், மற்றொரு நாளில் விசாரணை கோரியதை இம்முறைமன்ற நடுவம் ஏற்று 02.05.2023 அன்று விசாரணை நடத்த அழைப்பாணை அனுப்பப்பட்டும் அன்றைய விசாரணையிலும் மனுதாரர் ஆஜராகவில்லை. இவ்வாறு மனுதாரருக்கு போதிய சந்தர்ப்பம் அளித்தும், புகார் மனுவில் தெரிவித்துள்ள புகாரினை நிரூபிக்கத் தவறியுள்ளார். இந்நிலையில் முதுகுளத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையினை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையினை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டப்பிரிவு 175–ல் திடக்கழிவுகள் மற்றும் கழிவுநீரை அகற்றவது குறித்து கீழ்க்காணுமாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

Sec. 175: Disposal of solid wastes and drainage water:-

Sec. 175 (3): "Where no proper drainage system is provided in the municipal limit or in any part thereof, the municipality may make necessary arrangements to collect, transport and to treat the collected drainage water scientifically and dispose of the same in such manner as may be prescribed".

மேற்காணும் சட்டப்பிரிவு 175 (3)–ன்கீழ் முதுகுளத்தூர் பேரூராட்சி பொதுமக்களின் சுகாதார நிலையினை கருத்திற்கொண்டும், சுற்றுச்சுழல் மாசுபடுவதை தடுத்திடவும், நிலத்தடி நீர்வளம் பாதுகாத்திடவும், பேரூராட்சி குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து, உரிய பாசனங்களுக்கு பயன்படும் வகையில், கழிவுநீர் சுத்திகரிப்பு

நிலையத்தை அமைப்பதற்கான தொடர் நடவடிக்கையினை எவ்வித தங்குதடையின்றி செயல்படுத்திடுமாறு முதுகுளத்தூர் பேரூராட்சி செயல்அலுவலரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு மே திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. M.முகமது ஜியாவுதீன்,
8–B, முகமதியர் நடுத் தெரு,
முதுகுளத்தூர் தாலுக்கா – 623 704,
இராமநாதபுரம் மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
முதுகுளத்தூர் பேரூராட்சி,
முதுகுளத்தூர் – 623 704.
இராமநாதபுரம் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

4) இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவிப்பதிவாளர்

15/05/23